1981 ஆகஸ்ட் 26]

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தின் மதிப்பீடு என்ன? இதனால் பயன்பெறும் மக்கள் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் மதிப்பீடு 71.49 லட்சம் ரூபாய் பலன் அடையக்கூடிய மக்கள் 1971 ஆம் ஆண்டுக் கணக்குப் படி 47,356; 1991 ஆம் ஆண்டுப்படி 64,600; 2006 ஆம் ஆண்டுப்படி 81,800.

திரு. ஆர். ரங்கசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இந்தத் திட்டம் மிகவும் நிதானமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. துரிதமாக நடத்தப் படாததால் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் அவதிப்படுகின்ற நிலைமை இருக்கிறது, ஆகவே அவர்களுக்கு உதவிபுரியக்கூடிய முறையிலே விரைவிலே முடிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 1982 ஆம் ஆண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். டிசம்பர் என்பதை நவம்பர் அல்லது அக்டோபருக்குள் முடிப்பதற்கு பரிசீலனை செய்யப் படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த கொடிவேரித் திட்டம் கைவிடப்பட்டதாகவும் அதற்கு பதிலாக கோவையிலிருந்து 3½ கோடி ரூபாய் செலவில் பவானித் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டமும் இந்தத் திட்டமும் ஒன்றா, வெவ்வேறா? அப்படியானால் அது எப்போதுசெயல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் எப்போது அப்படிச் சொன்னேன்?

திரு. தி. கா. நல்லப்பன் : முன்னாலே சொன்னீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்படியென்றால் அதற்காகத் தனிக் கேள்வி போடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரடியாக விவாதம் வைத்து கொள்ளக் கூடாது.

வேளச்சேரி தண்டீசுவரம் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 74—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை மாநகராட்சி வேளச்சேரி, தண்டீசுவரம் நகர் பகுதியில் பொதுமக்கள் குடிதண்ணீருக்கு திறந்த குளத் துத் தண்ணீரைப் பயன்படுத்துவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டுள்ள வேளச்சேரி பகுதிக்கு 20.10 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான ஆய்வுகளை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் நடத்தி வருகிறது. விரைவில் இவ்வேலை கள் முடிக்கப்பட்டு, திட்டம் நிறைவேறுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வேளச்சேரி பகுதி சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, கிராமங்களிலே இப்படி திறந்த குளங்களி லிருந்து தண்ணீர் எடுத்துக் குடிப்பதை நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால் மாநகராட்சி போன்ற இந்தப் பகுதிகளில்கூட அப்படிப் பட்ட நிலைமைகள் இருக்கிறதே. எனவே, இந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படுமா? எப்பொழுது இந்தத் திட்டம் முடியும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

[முற்பகல் 10.20]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர வர்களே, வேளச்சேரி பகுதியில் தண்ணீர் வழங்குவதற்கான திட்டத்திற்காக 20.10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத் திற்கான பொறியியல் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் இவ்வேலைகள் முடிக்கப்பட்டு, திட்டம் நிறைவேறு வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பம்மல் நல்லதம்பி : தலைவரவர்களே, விரைவில் என்றால் எவ்வளவு காலம் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர வர்களே, "as early as possible" என்று அர்த்தம்.

திருப்பத்தூர் சர்க்கரை ஆலையில் தினக்கூலிகளாகப் பணிபுரிபவர்களை நிரந்தரமாக்குதல்.

*வினா எண் 77—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு ம வட்டம் திருப்பத்தூர் சர்க்கரை ஆலையில் தினக்கூலியாக வேலை செய்கிறவர்களை நிரந்தர மாக்குவதற்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டவர் கள் எண்ணிக்கை எத்தனை?